விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 16 ஷஃபான் 27 இதழ் 136
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-6-1981

சுன்னுகம் பொலிஸ்நிலையத்திலிருந்து

## 9 பொலிசார் திடீர் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]
''சுன்னுகம் பொலிஸ் நிலையத்திலிருந்து மேலும் 9 பொலிசார் நேற்று முன்தினம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக திரு. பொன். சுகுணேந்திரன் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் அவருக்கு மாலை சூட்டி வெடி கொளுத்தி வரவேற்பளித்ததாகவும் பொலிஸ் நிலையத்திலிருந்து இவ்வரவேற்பைக் கண்ட 9 பொலிசார் பரிகாசம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

[8ம் பக்கம் பார்க்க]

## 'அமிர்' வியாழன் திரும்புகிறார்

பாரிஸ், ஜூன் 29
இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று பாரிஸ் வந்து சேர்ந்தார்.

பாரிஸிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குச் செல்லும் அவர், தாயகம் திரும்பும் வழியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.

நிருபர்களிடம் அவர் தெரிவிக்கையில்; தமது பயணத்தைச் சுருக்கிக் கொண்டு வியாழக்கிழமை 2-ம் திகதி இலங்கை திரும்புவதாகக் கூறினார்.

# ஈரானின் ஆளும் கட்சித் தலைமையகத்தில் குண்டுவெடிப்பு! 64 பேர் பலி!

## பிரதம நீதியரசர், 3 அமைச்சர்கள் மாண்டனர்!

தெஹ்ரான் ஜூன், 29
ஈரானிய இஸ்லாமிய குடியரசு கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அறுபத்துநான்கு பேர் பலியானார்கள்! மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

குண்டுவெடிப்பு சம்பவத்தில், ஈரானின் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசரும், ஈரானிய இஸ்லாமிய குடியரசு கட்சித் தலைவருமான அயத்தொல்லா முஹமது பெஸ்ட்கி, மற்றும் மூன்று அமைச்சர்கள், எட்டு எம். பிக்கள் உட்பட ஈரானிய அரசியல் தலைவர்கள்பலரும்பலியானார்கள்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்திலிருந்து ஈரான் பிரதமர், சபாநயகர் ஆகியோர் மயிரிழையில் உயிர் தப்பியதாக ஈரானின் உத்தியோகபூர்வமான பாஸ் செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஈரானின் இஸ்லாமிய குடியரசுக்கட்சிக் காரியாலயத்திலுள்ள மண்டபத்தில் அரசியல் பிரமுகர்கள் கூடியிருந்த போதே இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

ஈரானின் முன்னுள் ஜனுதிபதி பானிசதாரின் ஆதரவாளர்களே இக்குண்டுவெடிப்புச் சம்பவத்திலிடுபட்டதாகக் குற்றம்சாட்டியுள்ள ஈரான் மதத்தலைவரொருவர் இஸ்லாமிய கொரில்லா இயக்கமே இச்செயலிலீடுபட்டிருக்கலாம் எனவும்

[8-ம் பக்கம் பார்க்க

## தனியானபாதுகாப்புசேவை யாழ்ப்பாணத்துக்கு தேவை

### மலேசிய எம். பி. கருத்து

[யாழ்ப்பாணம்]
''மலேசியாவில் உள்ளது போல் தனியான பாதுகாப்பு சேவையை யாழ்ப்பாணத்தில் ஆரப்பிப்பதன் மூலமே எதிர்காலத்தில் உங்கள் பகுதியைப் பாதுகாக்க முடியும். 75-ம் ஆண்டு மலேசியாவில் ஆரம்பமான பாதுகாப்புசேவை அங்குள்ள ஒவ்வொரு கிராமத்திலும் அரசின் உதவியுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பொலிஸாரோ இராணுவமோ இதில் தலையிடமுடியாது.

''இப்படியான பாதுகாப்பு சேவையை தான் கூட்டணியினர் சமர்ப்பித்துள்ள 5 கோரிக்கைகளில் ஒன்முக கேட்டுள்ளார்கள் எனக்கருதுகிறேன்''

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள மலேசியா எம். பி. திரு. ஏ. பொன்னையா 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ஏ. பொன்னையா மேலும் கூறியதாவது: "கிராமப் பாதுகாப்பு சேவை என மலேசியாவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சகல வீட்டு உரிமையாளர்களும் பதிவு செய்யப்படுகிறுர்கள். அவர்களுக்குள் தொண்டர்படை ஒன்று அமைக்கப்படுகிறது. இவர்களுக்குச் சம்பளம் கிடையாது இவர்களுக்கு அடையாள அட்டையும் அத்தாட்சிப்பத்திரமும் வழங்கப்படும். அந்தக் கிராமத்தில் சந்தேகத்திற்கு இடமானமுறையில் நடமாடும் எவரையும் கைது செய்ய இத்தொண்டர்களுக்கு அதிகாரம் உண்டு. கைது செய்தவுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அரசின் உத்தியோக பூர்வமான அந்தஸ்து இந்தப் பாதுகாப்பு சேவைக்கு உண்டு. பொலிஸாரின் உதவியும் உண்டு. இதனுல் கோழித்திருடன்கூட தலைகாட்ட முடியாது. இந்தப்

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ். பொலிஸ் நியமனங்கள்

[யாழ்ப்பாணம்]
யாழ். உதவிப்பொலிஸ் அதிபராக திரு. பேரின்பநாயகமும் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டராக திரு. சிவரத்தினமும் நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

## கொள்ளையின் பின் வீட்டுக்குத்தீ!

[யாழ்ப்பாணம்]
சுன்னுகம் மயிலங்காட்டிலுள்ள திருவிளங்கம் என்பவரது வீட்டிலிருந்து இனம் தெரியாத நபர்கள் சுமார் 44,000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்ததுடன் அவ்வீட்டையும் தீயிட்டு அங்குள்ள தென்னை, வாழை, மாதுளை மரங்களையும் வெட்டி வீழ்த்தி சேதப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் நான்கு பேர் திருவிளங்கத்தின் வீட்டிற்கு வந்து அவரையும், மனைவியையும் பயமுறுத்தி பொல்லால் தாக்கிக் காயம் விளைவித்தார்களாம். இவர்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

இது சம்பந்தமான விசாரணையை சுன்னுகம் பொலிஸ் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் திரு. செல்வராஜா, சார்ஜன்ட் திரு. பி. பரமானந்தம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

[மா-அ]

## யாழ் நூலகத்திற்கு 50,000 ரூபா அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணம் பொது நூலகத்தை திருத்துவதற்கு 50,000 ரூபாவை தான் வழங்கவிருப்பதாக மலேசியா எம். பி. திரு. ஏ. பொன்னையா நேற்று யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனிடம் தெரிவித்தார்.

இப்பணத்தை பகுதி பகுதியாக தான் அனுப்பி வைப்பதாகவும், தமிழன் என்ற முறையில் இதனைச் செய்வதாகவும் அவர் கூறினார். [க]

யாழ்ப்பாணம்—தலைமன்னர் பிரயாணிகளுக்கு

வாணர்சன்ஸ் ரவல்ஸ்

நடாத்தும்

தலைமன்னர் — இராமேஸ்வரம்
கப்பல் - பஸ் இணைப்புச் சேவை

யூலை மாதம் முதலாம் திகதி முதல்
(1-7-81) ஆரம்பிக்கப்படவுள்ளது
ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில்
கீழ்க்கண்ட நேர சூசிப்படி செயலாற்றப்படும்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் புறப்படல் காலை 9-30 | தலைமன்னர் சென்றடைதல் மாலை 4-15 |
| தலைமன்னரிலிருந்து புறப்படல் இரவு 10-00 | யாழ்ப்பாணம் வந்தடைதல் அதிகாலை 4-00 |

யாழ்ப்பாணம் — தலைமன்னர்
பகல் சேவைக்கட்டணம்: ரூபா 30-00
தலைமன்னர் — யாழ்ப்பாணம்
இரவு சேவைக் கட்டணம்: ரூபா 60-00
கப்பலில் வரும் பிரயாணிகளை யாழ் மாநகரசபை எல்லைக்குள் அவர்களின் இல்லங்களில் விடப்படும்.
உங்கள் ஆசனங்களை கீழ்க்கண்ட இடங்களில் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளலாம்.

1. அம்பலவாணர் அன் சன்ஸ்
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
196, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291

2. ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்
நவீனசந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சுபாஸ்கபேக்கு முன்பாக) தொலைபேசி: 660

குறிப்பு:
1. அட்டவணை இடப்படாத நாட்களில் விசேட கப்பல் சேவையிருந்தால் அந்நாட்களில் விசேட பஸ் சேவை நடாத்தப்படும்.
2. பிரத்தியேக வாடகைகளுக்கும் எமது பஸ் வண்டிகள் விடப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

அம்பலவாணர் அன் சன்ஸ்
(பிரபல பேப்பர், ஸ்ரேசனறி, மின்சார உபகரண விற்பனையாளர்கள்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி: வாணர்சன்ஸ் தொலைபேசி: 8291

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஆடி 1ம், 2ம் திகதிகளில் பெரியமடு மாதா கோவில் திருவிழாவை முன்னிட்டு மடு றோட்டில் மில்க்வைற் தயாரிப்புகள் யாவும் சலுகை விற்பனையுடன் அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 0143

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தில்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துராசா நமசிவாயம் பெண் முத்து லெட்சுமியின் மரண சாதனமில்லா மரணச் சொத்தின் தத்துவக்காரரை நியமிப்பதற்கான விண்ணப்ப விடயத்தில்

முத்துராசா நமசிவாயம் திருவடிநிழல் உரும்பிராய் கிழக்கு, உரும்பராய்.

மனுதாரர்

வழ. இல. தத்துவம்/3596

எதிராக

1. நமசிவாயம் பராசசேகரம்
2. நமசிவாயம் துரைரத்தினம்
3. நமசிவாயம் சத்தியசோதி

எல்லோரும் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

எதிர்மனுதாரர்கள்

மேலே கூறப்பட்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது அம்மன்றில் அதன் பிரகாரம் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்விண்ணப்பத்தில் அக்கறையுள்ள நபர்கள் எவர்களேனும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னராக இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் இறுதிக் கட்டளையாக்கக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்கள் காட்டுமாறு இத்தால் கேட்கப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 12-ம் திகதி.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி

ஒப்பம்

குலநாயகம்,
பதிவாளர்.

வரையப்பட்டது
ஒப்பம்
வ. மயில்வாகனார்,
மனுதாரரின் சட்டத்தரணி
0123

# மன்னார் மாவட்ட புதிய ஆயர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அருட்திரு சௌந்தரநாயகம் அடிகள் எதிர்வரும் 2ம் திகதி மன்னார் மாவட்ட ஆயராக திருநிலைப்படுத்தப்படுவார்.

மடுமாதா ஆலயத்தில் நடைபெறும் இவ்வைபவத்தில் இலங்கையிலுள்ள சகல மறை மாவட்ட ஆயர்களும் கலந்துகொள்வார்கள்.

திருநிலைப்படுத்தும் வைபவத்தைத்தொடர்ந்து அருட்திரு சௌந்தரநாயகம் அடிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி மன்னார் மாவட்ட ஆயராகப் பொறுப்பேற்று, முதலாவது திருப்பலி பூசையை மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

தற்போது ரோமாபுரியில் இருக்கும் அருட்திரு சௌந்தரநாயகம் அடிகளை பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் மன்னார் மாவட்ட புதிய ஆயராக நியமித்தார்.

## இப்படியும் தொல்லை!

(பண்டத்தரிப்பு)

கட்டுடையில் அமைக்கப்பட்டுவரும் மானிப்பாய் தேர்தல் தொகுதிக்கான சுயஉதவி வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளின் அத்திவாரக் கட்டுகளை இரவு வேளையில் சில விஷமிகள் சேதப்படுத்தி வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப்பெற தெரிவு செய்யப்பட்ட 30 வீடற்றவர்கள், தங்களுக்கான வீடுகளை கட்ட ஆரம்பித்துள்ளனர். கடந்த வாரம் சில வீடுகளின் அத்திவாரக் கட்டுகளை சில விஷமிகள் இடித்து சேதப்படுத்தியிருந்ததுடன் தொடர்ந்தும் இரவு வேளைகளில் விஷமத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனராம்.

யாழ். வீடமைப்பு அதிகார சபையினருக்கும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கும் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

## வானியற்கழக நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வானியற்கழகத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சட்டத்தரணி திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற போது புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர் டபிள்யூ. எஸ். செந்தில்நாதன், உப தலைவர்கள் கே. சச்சிதானந்தன், கே. என். நவரத்தினம். செயலாளர் ந. சுந்தரசாமி ஐயர் உதவிச்செயலாளர்கள் திரு. சிவஞானரஞ்சன், திரு. கா. ம. யோகீஸ்வரன், பொருளாளர் எஸ். செல்வா, நூலகப்பொறுப்பாளர் எஸ். பிரகலாதன், கணக்காளர் திரு. எஸ். நடராசசர்மா. உறுப்பினர்கள்: ஆர். சுந்தரையா, வி. சின்னத்துரை, எஸ் சிதம்பரநாதக் குருக்கள், என். திருநாவுக்கரசு.

## தலைவர் தெரிவு

(சங்கானை)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர் சபையின் தலைவராக திரு. செ. தங்கராசா, உப தலைவராக திரு. ம. சிவசுப்பிரமணியம் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

## யாழ். ரசிகரஞ்சன சபா இசைவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண ரசிகரஞ்சன சபாவின் வருடாந்த இசை விழா செப்டம்பர் 16ந் திகதி தொடக்கம் 12 தினங்களுக்கு நடாத்துவதென சபாவின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாவின் 39வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் இவ்விழாவில் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள இசைக்கலைஞர்களுக்கு இடமளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும் சபாவின் சங்கீதக்கல்லூரி நிகழ்ச்சிகளும் கடைசிநாள் கலை நிகழ்ச்சிகளும் நடாத்துவதென்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (மா)

## 1980-ம் ஆண்டின் சிறந்த நாவல் 'குருதிமலை' தகவம் தெரிவு

(கொழும்பு)

1980-ம் ஆண்டில் வெளிவந்த ஈழத்தமிழ் நாவல் இலக்கியத்துள் வீரகேசரி வெளியீடான, திரு. தி. ஞானசேகரனின் 'குருதிமலை'யே அதி சிறந்தது எனத் தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) தெரிவு செய்துள்ளது. வேறெந்த நாவல்களும் தரத்தை எய்தவில்லை என்பதினால், இந்நாவலாசிரியருக்கு தகவம் இவ்வாண்டு நாவல் பரிசுக்கென ஒதுக்கிய மொத்தத் தொகையான ரூபா 500-00யும் வழங்கும்.

புலோலியூர் க. சதாசிவத்தின் நாவல் 'நாணயம்' தகவத்தின் பாராட்டைப் பெற்றுள்ளது. இந்நாவலாசிரியருக்கு சன்மானமாகத் தகவம் ரூபா 100-00 வழங்கும்.

நாவலாசிரியர்களுக்கான சன்மானம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் தகவம் கொழும்பில் எடுக்கும் "இலக்கிய விழா"வில் வழங்கப்பட்டு, நாவலாசிரியர்கள் கௌரவிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தகவப் பொதுச்செயலாளர் திரு. வேல் அமுதன் தெரிவிக்கின்றார்.

## லயன்ஸ் கழகத்தின் நோக்கம்பற்றி இந்தியபிரமுகர்

(புலோலி)

"உலக மக்களை சர்வதேச ரீதியில் சமாதானமுறையில், நல்லெண்ணத்தையும், சமூகநல சேவையையும் நோக்கமாகக்கொண்டு ஒருங்கிணைத்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுப்பதுதான் லயன்ஸ் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாறு இந்திய பெல்கம் லயன்ஸ் கழகத் தலைவர் எஸ். ஆர். ஜோஷி பருத்தித்துறை கண்ணூர் வட்டத்தினரால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்திய பெல்கம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த கண் வைத்திய நிபுணர்கள் குழு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் இலவச கண் சிகிச்சை முகாமொன்றை நடாத்தியது.

பெல்கம் லயன்ஸ் கழகத் தலைவர் திரு எஸ் ஆர் ஜோஷி தலைமையில் டாக்டர்களான ஒ எஸ் எச் அசோக் ஹொடரே விநோதிரமோபடி, சுரேஸ் பற்றில், வீ ஆர் டண்டூர் ஆகியோரடங்கிய கண் வைத்திய நிபுணர் குழு வடமராட்சிப் பகுதி மக்களுக்கு இலவச கண் சிகிச்சைகளை அளித்தது. இக்கண் வைத்திய நிபுணர்களின் சேவையைக் கௌரவிக்குமுகமாகவே இவ்விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து பேசிய லயன்ஸ் கழகத் தலைவர் ஜோஷி குறிப்பிட்டதாவது;

உலகிலுள்ள 165 நாடுகளில் லயன்ஸ் கழகங்கள் இயங்கி வருகின்றன. மொழியால், மதத்தால், சமயத்தால் வேறுபட்ட சகல மக்களும் லயன்ஸ் கழகத்தால் ஒன்றுபடுத்தப்படுவதற்கு வழியுண்டு. சர்வதேசரீதியாக பரந்த முறையில், மக்களுக்கு சேவைகளை வழங்கிவரும் லயன்ஸ் கழகம் மக்களின் வாழ்வோடு இணைந்துவிட்டது.

நாங்கள் இங்கு டாக்டர்கள் என்ற முறையில் வரவில்லை லயன்ஸ் கழகத்தவர்கள் என்ற அடிப்படையில் சேவை செய்வதற்காகவே இங்கு வந்துள்ளோம். இப்பகுதி மக்களின் விருந்தோம்பல் பண்பு மிகச் சிறந்தது என்பதை மிக மகிழ்ச்சியுடன் கூறிவைக்கவிரும்புகிறோம். இங்குள்ள மக்களுக்கு எம்மாலியன்ற சேவைகளை ஆற்றியதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

பேராசிரியர் திரு. வி. கே. கனகலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: இந்திய பெல்கம் லயன்ஸ் கழக டாக்டர்கள், இலங்கையிலே ஒரே நாளிலேயே 64 பேருக்கு வடமராட்சிப்பகுதியில் கண் வைத்திய சத்திர சிகிச்சைகளை வழங்கிசாதனையொன்றை நிலைநாட்டியுள்ளனர். அன்னைதிரேசா அம்மையாருக்கு நோபல் பரிசு கிடைத்ததுபோன்று இவ்வைத்திய நிபுணர்களும் இவ்வாறு வைத்திய சேவையைத் திறம்பட வழங்கியதற்கு நோபல் பரிசு கிடைக்கலாம்.

பருத்தித்துறை கண்ணூர் வட்டச் செயலாளர் திரு. இரா. பஞ்சலிங்கம், பட்டயக்கணக்காளர் திரு. எஸ். சோமசுந்தரம் உட்பட இன்னும் பலர் பேசினார்கள்.

## யாழ். நூலகம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூலகம் எதிர்வரும் 3ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் யாழ் மாநகரசபை மண்டபத்தில் இயங்க ஆரம்பிக்கும். யாழ் மேயர் திரு. மேயர் இராசா விசுவநாதன் இந்த தற்காலிக நூலகத்தைத் திறந்து வைப்பார். [த]

## நாடகவிழா

[சுன்னாகம்]

மானிப்பாய் இந்துக்கல்லூரி இல்லங்களுக்குடையிலான நாடகவிழா போட்டி இரு நாட்கள் நடைபெறவிருக்கின்றன.

ஜூலை 1ம் தேதி மாலை ஆரம்பமாகும் முதல் நாடகவிழாவிற்கு யாழ் கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. ஏ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

2ம் திகதி மாலை நடைபெறும் இரண்டாம் நாள் நாடகவிழாவிற்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா கலந்துகொள்வார். [மா]

## ஜூலை 7 கடைசித்திகதி

[கொழும்பு]

1981-1982-ம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்குவதற்காக க. பொ. த உயர்தரப் பரீட்சையில் தகுதி பெற்றவர்களுக்கு அனுப்பப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டிய கடைசித் திகதி எதிர்வரும் ஜூலை மாதம் 7-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

படிவங்களை அனுப்ப வேண்டிய நாள் இம்மாதம் 12-ம் திகதியெனக் குறிக்கப்பட்டிருந்தபோதும் மாணவர்கள் இதுவரை படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பவில்லையாதலால் கடைசித் திகதி இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளது. (த)

உணவுமுத்திரை:

## மா. அ. சபைகளிடம் ஆலோசனை

[கொழும்பு]

குறைந்த வருமானமுடைய தகுதியானவர்கள் உணவுமுத்திரைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், தகுதியற்றவர்கள் அவற்றைப் பெறுவதைக் கண்டுபிடித்துத் தவிர்ப்பதற்கும் தேவையான ஆலோசனைகளையும்-சிபார்சுகளையும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளிடமிருந்து பெற்றுக்கொள்ள உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சு முடிவுசெய்துள்ளது. [த]

## தண்ணீர்த் தாங்கி நிர்மாணவேலை

[மன்னார்]

பிரதமர் ஆர். பிரேமதாசா உத்தரவைடுத்து மன்னாரில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் தாங்கியின் நிர்மாண வேலைகள் மீண்டும் அடுத்தமாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும், 15 ஆயிரம் கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய இத்தண்ணீர் தாங்கியின் நிர்மாண வேலைகள் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ரமழான்

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் எதிர்வரும் ரமழான் நோன்புமாதத்தில் நேற்றி விற்பனையும் புகைப்பிடித்தலும் தடைசெய்யப்படும், இதைவிட இரவு காலை முதல் நோன்பு திறக்கும் நேரம் வரை நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான நடவடிக்கைகளை ஜமா அத்தினரின் உதவியுடன் மருதி பரிபாலன சபையினர் மேற்கொண்டுவருகின்றனர்.


## தேவை

எக்ஸ்பெல்லரில் எண்ணெவகை ஊற்றக்கூடிய அனுபவம்வாய்ந்த ஆள் உடனடியாகத் தேவை தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு:

விக்னேஸ்வர ஆயில் மில்ஸ்
No. 5 துரைராஜா வீதி. யாழ்ப்பாணம்.
0160


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# தமிழர் விடுதலைக் கூட்டணி தடைசெய்யப்படுமா?

## அரசியல் வட்டாரங்களில் அடிபடும் கேள்வி

பிரிவினைக் கோரிக்கை சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டு, அதன் மூலம் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தடை விதிக்கப்படுமா?'

— அரசியல் வட்டாரங்களில் கடந்தவார இறுதியில் எழுப்பப்பட்டுள்ள வினா இது.

யாழ்ப்பாணத்து அண்மைச் சம்பவங்கள்: அதைத் தொடர்ந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு; அரசாங்கத்தின் மீதும், எதிர்க்கட்சித்தலைவர் மீதுமான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்: இடதுசாரிக் கட்சிகளின் நடவடிக்கை; அமிர்தலிங்கத்தின் வெளிநாட்டுப் பயணம்; பொதுநலவமைப்பு நாடுகளின் மாநாட்டில் கூட்டணியின் பிரச்சாரம்; அரசாங்கத்தின் பதிற் பிரச்சாரம்; இவை அனைத்தும் மொத்தமாக ஈற்றில் இந்த வினாவைத்தான் எழுப்புகின்றன.

யாழ்ப்பாணத்து துன்பியல் சம்பவங்கள் நடைபெற்று அது தொடர்பாக அரசுக்கு ஐந்து கோரிக்கைகளை விடுத்து பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற பகிஷ்காரத்தில் ஈடுபட்டுள்ள வேளையில் இலங்கையில் சர்வஜன வாக்குரிமையின் 50வது ஆண்டு நிறைவையொட்டி இலங்கைக்கு விஜயம் செய்த பொதுநலவமைப்பு நாடுகளின் பிரதிநிதிகளின் இரண்டுநாள் மாநாடும் கடந்த வார இறுதியில் கொழும்பில் நடைபெற்றது. 25 நாடுகளின் 100 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

— பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த மாநாட்டைப் பகிஷ்கரித்தது. ஆனால் யாழ்ப்பாணச் சம்பவங்கள் நடைபெற்று 3 வாரங்களுள் இங்கு வந்த இவர்கள் மத்தியில் யாழ். சம்பவங்கள் பற்றியும், அபிவிருத்தி சபைத் தேர்தல் நடந்த முறை பற்றியும் பலமான பிரச்சாரத்தில் கூட்டணி இறங்கியது. கூட்டணி உறுப்பினர் சிலர் சுற்றுலாக்களில் கலந்துகொண்டும், பிரதிநிதிகள் தங்கியிருந்த ஹோட்டல்களில் அவர்களைச் சந்தித்தும் இப்பிரச்சாரத்தை நடத்தியதோடு, பிரசுரங்கள் சிலவற்றையும் விநியோகித்தனர்.

20ந் தேதி முதல் கொழும்புக்கு வர ஆரம்பித்த இவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் ஒப்பமிட்ட நான்கு பிரசுரங்களை விநியோகித்தார்கள். இவற்றில் ஒன்று திரு. யோகேஸ்வரனின் ஒப்பமிடப்பட்டது.

இத்தகைய மாநாடுகள் நடைபெறும் வேளைகளில் எதிர்க்கட்சிகள் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுவது புதிதானதல்ல. 1976ம் ஆண்டு நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 4வது உச்சி மாநாட்டிலும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கூட்டணி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டது அப்போது நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய மாநாட்டிலும், பின்னர் இந்த அரசாங்ககாலத்தில் கூட அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டிலும் இப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வேளைகளில் அரசாங்கம் அந்நடவடிக்கைகளை முறியடிக்க முயல்வதும் வழக்கமே. இம்முறையும் ஹோட்டல்களில் இப்பிரசுரங்களை விநியோகிக்க முடியாதபடி அரசு தடைசெய்ததாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், அமைச்சர் திரு. அத்துலத்முதலி பிரிவினைவாதிகள் கூட பிரசுரங்களை விநியோகிக்கும் சுதந்திரம் இந்நாட்டில் உண்டு என்று முதல்நாள் கருத்தரங்குக்கு தலைமைதாங்கிப்பேசுகையில் குறிப்பிட்டார்.

— மாலி —

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்தப் பிரச்சாரம் எந்தளவுக்கு நடைபெற்றதோ ஆனால் அவற்றுக்கெதிரான அரசாங்கத்தின் மாற்றுப்பிரச்சாரங்கள் பலமானவையாக இருந்தன. மாநாட்டின் தொடக்க வைபவத்திலேயே இது பலமாக வெடித்தது.

— முன்னைய ஏற்பாட்டின்படி எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கமும் இத்தொடக்க வைபவத்திற்கலந்து கொண்டு உரையாற்றுவதாகவும் மறுநாள் குழுநிலைக்கருத்தரங்கு ஒன்றுக்கு அவர் தலைமைதாங்குவதாகவும் இருந்தது. திரு. அமிர்தலிங்கம் வெளிநாடு சென்றுவிட்டதால் அவருக்குப் பதிலாகக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் இவற்றில் கலந்து கொள்வது பற்றி ஆலோசிக்கப்பட்டாலும், பின்னர் அந்த யோசனையைக் கூட்டணி கைவிட்டு, மாநாட்டைப் பகிஷ்கரிக்கத் திட்டமிட்டது. கூட்டணி உறுப்பினர் எவரும் தொடக்க வைபவத்திலோ மாநாட்டிலோ பங்குபற்றவில்லை.

### ஜனாதிபதி உரை

தொடக்க வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பிரசாரம் பற்றி நேரடியாகவே குறிப்பிட்டார். பிரசுரமொன்றில், பிரதிநிதிகளே யாழ்ப்பாணம் வந்து, அங்கு விளக்கப்பட்டுள்ள நாசங்களை நேரிலே பார்த்துச் செல்லுமாறு அழைப்பு விடுத்திருந்தபோது, "நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம், பார்க்க வேண்டியதைப் பார்க்கலாம். எதையும் பேசலாம்; வாசிக்கலாம். நான் அறிகிறேன் சிலர் உங்களுக்கு சில பிரசுரங்களை விநியோகித்திருப்பதாக. விரும்பியதை வாசிப்பதற்கு- சொல்ல நினைப்பதை சொல்வதற்கு- செய்ய நினைப்பதைசெய்வதற்கு இந்நாட்டில் எவ்விததடையும் இல்லை" என்று ஜே. ஆர். மாநாட்டு பிரதிநிதிகளைப் பார்த்துக்கூறினார்.

— தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பிரசுரம் பற்றி மாத்திரமல்ல, யாழ் சம்பவங்கள் தொடர்பாக பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் கூறிய அரசியல் அவதானிகளின் சிந்தனையை வெகுவாகக் கவரக் கூடியதாகவிருந்த இதுவாகும். பிரதமர் திரு. ஆர். பிரேமதாசவும் இப் பிரச்சினை பற்றி தெரிவித்தார்.

தொடக்கவைபவம் முடிவுற்றதும் கூட்டத்தில் [Lobby] பிரதிநிதிகள் சிலருடன் திரு பர்கள் பேசிக்கொண்டிருந்தபோது யாழ். சம்பவங்கள் பற்றி அவர்கள் ஓரளவு அறிந்தே இருந்தார்கள். அவர்களில் சிலர் யாழ்ப்பாணம் செல்வதற்கும் ஆவலாகவிருந்தார்கள்.

ஆக மறுநாள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பிரசுரம் ஒன்று பிரதிநிதிகளுக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டது. 'பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமான விசாரணைகள்' என்ற இப்பிரசுரம் கூட்டணியினரின் பிரசுரத்துக்கான பதிலாகவே குறிப்பிடப்பட்டிருந்தது. 27 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அப்பிரசுரத்தில் 1977 ஜனவரி முதல் 1981 மே மாதம் வரை நடைபெற்ற வன்முறைச்சம்பவங்கள் என்று குறிப்பிடப்பட்ட பட்டியல் ஒன்றும் இடம்பெற்றிருந்தது. 1977ம் ஆண்டில் 35; 78 இல் 31, 79இல் 31, 80 இல் 27, 81இல் 12 கொள்ளைச் சம்பவங்களும் 1977, 78, 79 ஆகிய காலப்பகுதிகளில் 14 பொலிசாரும் 81ல் 3 பொலிசாரும் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் 3 அரசியல் வாதிகள் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் இரு அரசியல் வாதிகள் மீது கொலைமுயற்சி நடைபெற்றதாகவும் பொலிசாருக்கு தகவல் கொடுப்பவர்களும் 7 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக எப்படியோ மாநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் யாழ்ப்பாண விவகாரங்கள் அறியப்படுத்தப்பட்டதோடு அவர்களின் கவனத்தையும் அவை ஈர்த்திருக்கின்றன.

ஐக்கிய ராஜ்யத்திலிருந்து 5 பேர் மாநாட்டுப் பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர். ஜனாதிபதியின் பேச்சுக்குறித்தோ தமது சகாக்களின் கருத்து குறித்தோ கருத்துத் தெரிவிக்க விரும்பாத அவர்கள் பிரி. பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றை சபாநாயகர் பாக்கிர் மாக்காரிடம் கையளித்திருப்பதாக கூறினர்.

ஆக இதற்கிடையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் சர்வதேசிகளை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக உடன் நடவடிக்கைக்கு வற்புறுத்தி ஏராளமான கடிதங்களை ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

தென்னிலங்கை இடதுசாரி அரசியல் கட்சிகள் பல யாழ். சம்பவங்கள் தொடர்பாக கண்டனமும் அபிவிருத்தி சபைத்தேர்தலில் யாழ். மக்களுக்கு பாராட்டும் தெரிவிப்பதோடு தென்னிலங்கையில் நடைபெறப் போவனவற்றின் ஒத்திகையே இது என்று சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளன.

இந்த நிலைமைகளில்வெள்ளிக்கிழமை கூடிய அமைச்சரவை தீர்மானம் முக்கியமானது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு

(6ம் பக்கம் பார்க்க)

---

### இஸ்ரேல்
# ஆக்கிரமித்த பகுதியில் கால்வாய் நிர்மாணம்
### அரபுலீக் கண்டனம்

பெய்ரூத், ஜூன் 29

மத்தியதரைக் கடலையும், சாக்கடலையும் இணைக்கும் கால்வாயை நிறுவப்போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இது, 1967ம் ஆண்டு ஆக்கிரமிப்பின்போது இஸ்ரேல் கைப்பற்றிவைத்துள்ள ஜோர்தான் மேற்குக் கரை, காஸா பகுதியூடாகச் செல்லும். இது சர்வதேசச் சட்டத்தை மீறும் செயலாகுமென்று கூறப்படுகிறது.

1949 ஜெனிவா மாநாடு இதனைத் தடைசெய்கிறது. இவ்வொப்பந்தத்தில் இஸ்ரேலும் கைச்சாத்திட்டுள்ளது.

அரபு லீக்கின் பொதுக் காரியதரிசி செஅத்லி கிலிபி, கால்வாய்த் திட்டத்தில் எந்த நாடாவது பங்குபற்றினால், அரபு நாடுகள் பகிஷ்கரிக்கும் என்று அறிவித்துள்ளார்.

---

### யாழ்ப்பாணம் வந்த
# 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பிராந்திய ஆசிரியர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வந்திருந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையைச் சேர்ந்த திரு. சஹீத் நக்கவி, வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட பல இடங்களையும் பார்வையிட்டுத் தகவல் சேகரித்து, புகைப்படங்களும் எடுத்துக் கொண்டார்.

இந்தியாவின் தென் பிராந்திய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பதிப்புகளுக்குப் பொறுப்பாசிரியராகவுள்ள திரு. சஹீத் நக்கவி, நேற்று யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ் எம். பி யின் பாரியார் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் ஆகியோரையும் சந்தித்தார்.

---

## பாரசீக விரிகுடா நாடுகளுக்கு ஆபத்து

பெய்ரூத், ஜூன் 29

துரிதமாகத் தாக்கும் படையைப் பாரசீக விரிகுடாப் பகுதிக்கு அனுப்பும் அமெரிக்கத் திட்டத்தால் பிராந்திய நாடுகளின் சுதந்திரத்திற்கு ஆபத்து என்று ஐக்கிய அமீரராஜ்யங்களின் ஜனாதிபதி ஷேக் சையத் பின் சுல்தான் அல்-நஹயான் தெரிவித்துள்ளார்.

'அல்-முஸ்தகபல்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

"பாரசீகப் பிராந்தியத்திற்கு அரபு நாடுகளை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிடமிருந்தே பிரதான ஆபத்துத் தோன்றியுள்ளது. அரபு விரோதக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அமெரிக்கா அரபு நாடுகளுக்கு வேறு நாடுகளிலிருந்து ஆதரவைத் தடுக்க முயலுகிறது" என்று கூறியுள்ளார்.

---

## வெள்ளி விழா

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை கிழக்கு திருமகள். சனசமூகநிலையம் தனது வெள்ளிவிழாவை சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்துள்ளது. இதனையொட்டி விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும், வெள்ளி விழா மலர் ஒன்றை வெளியிடவும் நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

---

### யாழ். வன்செயல்கள்:
# "சிங்கள மக்களும் கண்டிக்கிறார்கள்"
### உண்ணாவிரதத்தில் பௌத்த மதகுரு

(திருகோணமலை)

"யாழ்ப்பாணத்தில் மே மாதம் 31ந் திகதியும், ஜூன் மாதம் முதல் வாரத்திலும் நடந்த வன்செயல்களை, சிங்கள மக்களிலும் பலர் கண்டிக்கிறார்கள். அதற்கு அடையாளமாகவே நான் இந்த உண்ணாவிரத இயக்கத்தில் கலந்துகொண்டேன்."

இவ்வாறு இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த பௌத்த மதக் குருவான வண. பணவொட உதித்ததேரோ, திருகோணமலையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

"யாழ்ப்பாணத்தில் நடந்த

[6-ம் பக்கம் பார்க்க]

---

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த க. பொ. த. உயர்தர வகுப்பு விஞ்ஞான மாணவர்களுக்கு 'ஒட்டுண்ணிகளும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்' என்னும் விடயம் பற்றிய மூன்று நாட் கருத்தரங்கு இன்று 30ம் திகதி தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கருத்தரங்கை யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானத்துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நடாத்திவைப்பார்கள். கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் மேற்கொண்டுள்ளார்.

மணிவாக்கு

அநீதியால் அவஸ்தைப் படுவதைவிட, அநீதிசெய்வதுதான் இன்னும் அவமானகரமானது.
— பிளேட்டோ.

# நமது நோக்கு

## 'டைம் பொம்'

இன்று இஸ்ரேலில் நடைபெறும் பொதுத்தேர்தல் எங்கள் நாட்டுக்கும், சிறப்பாக இனப்பிரச்சினைக்கும் ஒரு முக்கிய பாடமாகும். சிறப்பாக அரசாங்கத்தைச் சிந்திக்கவைக்க உதவுவது.

பொதுத்தேர்தல் பிரசார மோதலில் முக்கிய கட்சிகளான ஆளுங் கட்சியான பிரதமர் பெகினின் வலதுசாரிக்கட்சியும், எதிர்க்கட்சியான தொழிற்கட்சியும் பல வன்செயல்களில் ஈடுபட்டிருந்தன. கட்சிப் போட்டிகள் உள்ளூர் அமைதியைக் கெடுத்திருக்கிறது.

கட்சிப் பிரதம காரியாலயங்கள் எரிக்கப்பட்டதும் மற்றும் பலவன்செயல்களால் கூட்டங்கள் குழப்பப்பட்டதும் அந்தக்குட்டி 'வல்லரசின்' குணத்தைக் காட்டுகின்றது. இதனால் ஆறுதல் அடைவது அவசியமற்றது.

நாடற்ற புகலிடமற்ற தேசாந்திரிகளான கதியை எதிர்நோக்க ஹிட்லரின் சர்வாதிகாரம் யூதர் சமூகத்தை நிர்ப்பந்தித்தது. பலதேசங்களிலும் - மேற்கு கிழக்கு - பலதிறப்பட்ட பெருந்திறமை பெற்ற யூதர் சமூகம் வாழ்ந்து வந்தபோதும் நாடற்ற நிலைமை அவர்கள் தேடிக்கொண்ட பகைமையால் மட்டுமல்ல வேற்றுநாடுகளின் பொறுமையாலும் ஏற்பட்டது.

யூதர்களுக்கு என்றும் சார்பான அமெரிக்கா அவர்களுக்கென ஒருதனி நாட்டை 1949ல் அமைக்க முன்வந்தது. இன்று 35 லட்சம் மக்கள் கொண்ட இஸ்ரேல் எத்தனை அரிய சாதனைகளை நிலைநாட்டி விட்டது.

அது வரவில் வைக்கப்பட்டால் செலவில் காணப்படும் கருத்துக்கள் எங்கள் நாட்டுக்கும் நல்ல படிப்பினையாக அமையவேண்டும். எம்மைவிட்ட வீரர் உலகில் வேறெங்கும் இல்லையென்ற உணர்வே அந்தப்படிப்பினை.

மத்தியகிழக்கு நாடுகளின் சமாதான வாழ்வு பல்லாண்டுகளாக முயற்கொம்பாகவே இருந்து வருகிறது. பல பிணக்குகளுக்கு அண்டை நாடுகளின் அரசியல் பகைமை துணைக்காரணம் என்றே கொள்ள வேண்டும். மூதற்காரணம் என்ன என்பதை அறியாதவர்கள் உலகில் என்ன நடைபெறுகின்றதென்பதை அறியாதாரே!

நடத்திருந்த யூதர் நாடு கிடைத்ததும், அதனை அற்புதமான முறையில் விருத்தி செய்ததும் அது மட்டுமல்ல தங்கள் ஜென்மப் பகைவர்களானஎகிப்தியரை அரபு மக்களை போரில் ஜெயித்ததும் வீரச்செயல்களே!

ஆனால் இன்று மத்திய கிழக்கு அமைதி வாழ்வுக்கு மட்டுமல்ல உலகசமாதானத்துக்குமே பெருந்தலையிடி கொடுக்கும் நாடு இஸ்ரேல் என்றுபலர் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் பொம்மை விளையாட்டில்முக்கியஇடம் பெறுவது இஸ்ரேல்! சிலர் அமெரிக்க ராஜதந்திரத்தின் 'டைம்பொம்' இஸ்ரேல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

எங்கள் நாட்டுக்குப் பொருத்தமான கருத்து இதில் ஒன்றுண்டு. மற்றைய எதிரிகளை தோற்கடிக்க ஒற்றுபட்ட இஸ்ரேல், இன்று ஜனநாயகப் போர்வையில் போட்டி ஆதிக்கத்தையும் ஒற்றுமையின்மையையும் தேடிக்கொள்கின்றது.

பணவீக்கம் இன்று 134 சதவீதத்துக்கு ஏறியிருக்கிறது. ஆளும்கட்சி பொது மக்களைப் பட்டு வாழ்வில் இறக்கி வாக்குத்திரட்ட ஏமாற்றுகிறது. வெளிநாட்டுக்கடன் அசுர வேகத்தில் ஏறியுள்ளது. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் நாட்டின் வரவில் மூன்றில் ஒரு பங்கு இக்கடனைக் கொடுப்பதற்குச் செலவாகின்றது.

ஆட்சியை எவ்விதத்திலும் கைப்பற்றவேண்டுமென்ற அதிகாரமோகம் வளர்ச்சிய டைந்துவந்த நாட்டைக் கெடுத்துவருகிறது. ஆட்சியில் தொடரவேண்டுமென்ற பிரதமர் பெகின், லிபியப் பிரச்சினையில் எள்ளளவும்விட்டுக்கொடுத்தாரில்லை. தமக்கு இப்பிடிவாதம் இன்று வெற்றியீட்டும் என்பதே அவருடைய நம்பிக்கை! இந்த வியாதியே இங்கு தமிழ்மக்கள் படும் இன்னல்களுக்கு மூதற்காரணம்!

தான்பெற்ற செல்வத்தை ராணுவ பலத்தை வல்லரசின் அணைவை, யுத்த வெற்றியையிட்டு ஒருநாடு, ஒரு தேசம் செருக்கடைவதை, அதன் விளைவை வரலாறு காட்டுகின்றது. இன்று இஸ்ரேலை உதாரணமாகக் காட்டலாம். ஒருகாலம் தனக்கேற்பட்ட கதியை இன்று பலஸ்தீனுக்கு ஏற்படுத்திவருகிறது. வரலாற்றின் தாற்பரியத்தைப் புரியத்தவறுகின்றது.

எங்கள் நாட்டில்நிலவிய, நிலவும் பிரச்சினைகள் எங்களை உலகின் அவகதிப்புக்கு ஆளாக்குமென்று எண்ண மனம் எழவில்லை. இருந்தும் சிவற்க அபாய சின்னங்கள் தென்படத் தொடங்கியிருக்கின்றன.

அந்நிய ஆட்சியில் சிங்கள மொழியும் பௌத்த மதமும் அவலாத்தாக்குதலுக்குள்ளானது பழங்கதை. உலகிலே பௌத்த சிங்கள இனம் இலங்கையில் மட்டுமே உண்டுஎன்பதும் நாமறிந்த உண்மை. இதனைப் பாதுகாத்துப் பேணுவதற்கு மற்றைய இனங்களை, மொழிகளைக்கட்டுப்படுத்தி, தேவையானால் அடக்கி ஆளநினைப்பது அரசியல் மடமையாகும்.

அதேபோல் தமிழ்மக்கள் தாமிழந்த உரிமைகளை மீண்டும் வென்றெடுக்க வாதாடுவதும், அதில் வெற்றிகாண முயல்வதும் நியாயமானவை. இந்த முயற்சியில், இரு தரப்பினரும் முரண்படாமலும், முரண்பட்டபோதும் பயங்கரவாதத்தில் நம்பிக்கை வைக்காமல், மந்திரத்திலும் தந்திரத்திலும் தொடர்ந்து நிற்பது அரசியல் விவேகமானதும் தவிர்க்கமுடியாததும்!

எங்கள் நாட்டின் இன்றைய நிலைமைக்கு மீட்டுவைத்துவிட்டுப் போன 'டைம்பொம்' தான் காரணமென்பது அரசியல் ஞானமாகாது. நாமிருக்கும் நாடு நமக்குரியதென்றால் விடிவுகாணும் பொறுப்பும் எம்முடையதே!

# தேசிய பத்திரிகைகளும் யாழ். வன்செயல்களும்

யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்கள், தீ வைப்பு, கொள்ளை, கொலை முதலிய அட்டூழியங்கள் பற்றி இலங்கைக்குப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளின் பத்திரிகைகளில் புகைப்படங்களும், செய்திகளும் மட்டுமல்ல, ஆசிரியத் தலையங்கங்களும் வெளிவந்திருக்கின்றன.

## எஸ். எம். ஜி.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தாலும் அதைப் பெரிதுபடுத்திச் செய்தியாக வெளியிடும் இலங்கையின் பிரபல ஆங்கில, சிங்களத் தினசரிகள், யாழ்ப்பாணத்தில் சென்ற மாதம் 31ந் தேதி ஆரம்பித்து இம்மாதம் முதல் தேதி விஸ்வரூபமெடுத்துத் தொடர்ந்தும் சில தினங்கள் நீடித்த தீவைப்பு, கொள்ளை, கொலை முதலிய செய்திகளுக்கு இடமளிக்கவில்லை. சில தினங்கள் பத்திரிகைத் தணிக்கை அமுலில் இருந்தது உண்மைதான். தணிக்கை நீக்கப்பட்ட பின்னர் இந்த அட்டூழியங்கள் பற்றிய செய்திகளையும், புகைப்படங்களையும் வெளியிடுவதற்குத் தடை எதுவும் இருக்கவில்லையே.

இங்கு ஒரு சம்பவம் நடந்துவிட்டால் நிருபர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் குழுக்களையே இங்கு அனுப்பி, முகாமிட்டு அச்சம்பவங்கள் பற்றித் தீர்ந்து துருப்பிடித்துத் துணைத் துரும்பாக்குவதில் வல்லமையுள்ள இந்தத் தேசியப் பத்திரிகை நிறுவனங்கள், ஆசியாவிலேயே சிறந்து விளங்கும் யாழ். பொதுசன நூலகம் தீவைத்து, அரும் பெரும் நூல்களைக் கொண்ட தொண்ணூற்றாயிரம் நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டதையே, இலங்கையிலேயே தலைநகருக்கு வெளியே வெளிவரும் தினசரிப் பத்திரிகை என்ற பெருமையை உடைய 'ஈழநாடு' தமிழ்த் தேசியப் பத்திரிகை அலுவலகம் தீக்கிரையானது பற்றியோ மற்றும் கொள்ளை, கொலைகள் பற்றியோ செய்தி வெளியிடாதது ஏனோ?

இந்தத் தேசியப் பத்திரிகை நிறுவனங்கள் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுகின்றன. இவை இதற்குமுன் வியாபாரத் தந்திரத்துக்காகத் தமது வாசகர்களைக் கவரும் பொருட்டு, ஆங்கிலப் பத்திரிகைகள் ஒரு முறையில் செய்திகளை வெளியிடுவதும், சிங்கள மொழிப் பத்திரிகைகள் வேறு விதமாகவும், தமிழ்மொழிப் பத்திரிகைகள் மற்றொரு விதமாகவும் செய்திகளை வெளியிட்டுவந்தன. இதற்கேற்றாற் போல நாட்டில் மொழிப் பிரச்சினை தலைதூக்கியதும் அரசியல்வாதிகளுடன் போட்டி போட்டு, அவர்களையும் மிஞ்சியளவில் வகுப்புவாதத்தைத் தூண்டித் தங்களது விற்பனையையும், வருமானத்தையும் பெருக்கிக்கொண்டன.

அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்ததும் தேசியவாதம் பேசுவார்கள்; தேசியத் தினசரிகளும் தேசிய ஐக்கியம் பற்றி ஆசிரியத் தலையங்கங்கள் தீட்டும்!

''தேசிய ஐக்கியம்'' என்பதற்கு நாட்டில் கொடுக்கப்படும் வியாக்கியானமே தனி!

ஜனநாயகத்துக்கும், சோஷலிஸத்துக்கும் இங்கு கொடுக்கப்படும் விநோதமான வியாக்கியானத்தைப் போலவே தேசிய ஐக்கியத்துக்கும் இங்கு விநோதமான விளக்கம் கொடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நடந்துள்ள அட்டூழியங்களைப் பற்றிய செய்திகளையோ புகைப்படங்களையோ முக்கியத்துவம் கொடுத்து நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் உண்மையை எடுத்துக்கூறத் தவறிய தேசியப் பத்திரிகைகள் சில, சில தினங்களுக்கு முன் "நாட்டைப் பிரிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு" என்றும், ''வெளிநாட்டு உதவி கிடைக்காமல் தடுப்பதற்குத் தமிழர் கூட்டணி முயற்சி'' என்றும் கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்திகள் வெளியிட்டுள்ளன.

நாட்டில் தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்குப் பத்திரிகைகள் நல்ல முறையில் பணிபுரியமுடியும்! இந்த நம்பிக்கையில்தான் யாழ்ப்பாணத்தில் மிகக் குறுகியகாலம் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. லயனல் பெர்னாண்டோ, தெற்கிலுள்ள பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்தார். யாழ்ப்பாணத்தில் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பும் அளிக்கப்பட்டது. ஆனால் அதன் விளைவு? லயனல் பெர்னாண்டோ விரைவில் யாழ்ப்பாணத்திலிருந்து போய்விட்டார். பின்னையார் பிடிக்கக் குரங்கான கதையாகி விட்டது!

## மக்கள் கருத்து

### கொடூரமான செயல் இது

'ஈழநாடு' அலுவலகம் மோசமாகச் சேதப்படுத்தப்பட்டு, ஊழியரும் காயப்படுத்தப்பட்டதாக அறிந்து பதைபதைத்தோம். புனித பணியகம் என்ற மனித சிந்தையும் அற்று, கொடூர காரியம் செய்தனரே என வருந்துகிறோம். தங்களின் துயரினை தாமும் பகிர்ந்து கொள்ளுகின்றது நல்லுணர்வுமிக்க உள்ளங்கள் பகிர்ந்துகொள்ளுகின்றன.

வேல் அமுதன்
(செயலாளர்)
தமிழ்க் கதைஞர் வட்டம்.

1 ம் பரிசு -
சிங்கர் குளிர்சா
2 ம் - 6 ம் பரிசு
சிங்கர் தையல்
7 ம் - 16 ம் பரிசு
சிங்கர் பைசிக்கி
17 ம் - 26 ம் பரி
சிங்கர் றைஸ்
27 ம் - 50 ம் பரி
பொலரொயிட்
கமெராக்கள்
INTASEL

# றஃபோம்
# டும்பத்தைக்
# பிடித்து 50 கவர்ச்சியான
# ளை வெல்லுங்கள்




விதிகள்

1. கீழே தரப்பட்டுள்ள பிரவேசக் கூப்பனில் உங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதவும். வெற்றிடங்களில் அங்கு தரப்பட்டுள்ள விளக்கவுரைகளுக்கு மிகப் பொருத்தமான படங்களென நீங்கள் கருதும் படங்களின் இலக்கங்களை எழுதி கோடிட்டு நிரப்புவதற்கென விடப்பட்டுள்ள இடைவெளிகளையும் பூர்த்தி செய்யவும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனைப்பிரித்தெடுத்து அத்துடன் ஒரு வெற்று ஒறஃபோம் பற்பசைப் பெட்டியையும் இணைத்து ஒரு தபால் உறையில் பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

ஒறஃபோம் குடும்பத்தைக் கண்டுபிடிக்கும் போட்டி,
மே/பா இன்டசெல் அட்வட்டைசிங்
60, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை
கொழும்பு 7.

3. ஒருவர் எத்தனை பிரவேசக் கூப்பன்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஒறஃபோம் பற்பசை வெற்றுப் பெட்டி இணைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஒரு தபாலுறையில் ஒரு பிரவேசக் கூப்பனை மட்டும் இடுதல் வேண்டும்.
4. மஹாராஜா ஓர்கனைஸேஷன், இன்டசெல் அட்வட்டைசிங் ஆகியவற்றின் ஊழியர்கள், அவர்களின் நெருங்கிய குடும்பத்தினர் ஆகியோர் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.
5. முதலில் தேர்ந்தெடுக்கப்படும் முற்றிலும் சரியான பிரவேசக் கூப்பனுக்கு முதற் பரிசு வழங்கப்படும். அதேமுறையில் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும்.
6. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. அது பற்றிய எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

## வியாபாரிகளுக்கான பரிசு

ஒறஃபோம் வியாபாரிகள், அவர்களுக்கான பரிசைப் பெறுவதற்கு, விற்பனைக்கு முன்னர் எல்லா ஒறஃபோம் பற்பசைப் பெட்டிகளிலும் தங்கள் பெயர், முகவரியை முத்திரையிடும் படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்
மஹாராஜா ஓர்கனைஸேஷன் லிமிட்டெட்,
54, பாங்ஷோல் வீதி, கொழும்பு 11.

SLS 275 இலங்கைத் தரநிர்ணயச் சபையின் அங்கீகாரம் பெற்றது.



பெட்டி 5 ச.அ.

ங்கள் -

குறிப்பு — தெளிவாக நிரப்பப்பட்ட இக்கூப்பனின் பிரதியும் ஏற்றுக்கொள்ளப்படும்.

போட்டி முடிவு திகதி 15.9.1981

பெரிய அளவு - ஒன்று ரூ. 7/45
நிகர அளவு - ஒன்று ரூ. 5/35

### இடைவெளிகளை நிரப்பவும்

பற்சொத்தையை தடுப்பதற்கு மிகச் சிறந்ததென உலகெங்குமுள்ள பல்வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்படுவது ........................ அதனால்தான் குழந்தைகளில் அக்கறைகொண்ட தாய்மார் தெரிவுசெய்யும் பற்பசை........................

| தாய் | தந்தை | மகள் | சிறிய மகள் | சிறிய மகன் |
|---|---|---|---|---|
| | | | | |

பெயர்: ______________________

முகவரி ______________________

LICENCE NO: 3765

ற்பாதுகாப்புக்கு ஒறஃபோம் பற்பசையைப் பாவியுங்கள் - அது ஃபுளோரைட் கொண்டது.

## துன்னாலை வாலிபர் மரணம்:

# "ராஜகோபால் பேசியதுபற்றி ரேணுகாதேவி என்னிடம் கூறினர்',

வங்கி உபமுகாமையாளர் சாட்சியம்

(புலோலி)

"இறந்தவர் இறப்பதற்கு சுமார் ஐந்து கிழமைகளுக்கு முன்னர் ஒருநாள் ரேணுகா தேவியிடம் போய் பல ஆசை வார்த்தைகளைச் சொன்னதாக ரேணுகா தேவி என்னிடம் முறையிட்டிருந்தார்'

இவ்வாறு துன்னாலை வாலிபர் இராஜகோபால் மரணம் சம்பந்தமான மரணவிசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் நடைபெற்றபோது வவுனியா இலங்கை வங்கி உதவி முகாமையாளராகிய முகுந்தசக்கரவர்த்தி நவரத்தினராசா சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் இறந்தவரின் நலனைக் கவனிக்குமுகமாகச் சட்டத்தரணிகளான திரு. சோமசுந்தரம், இயலோகநாதன், இளங்குலசுந்தரம் (காண்டீபன்) ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

1-ம் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணிகளான திரு. தம்பிரத்தினம், திரு. செல்லத்தம்பி, திரு. முத்துக்குமாரு ஆகியோரும், 2-ம் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணிகளான திரு ஸ்ரீகிவாயா, திரு. கிருஷ்ணராசா ஆகியோரும், 3-ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான திரு செல்லத்தம்பி, திரு. முத்துக்குமாரு ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த நவரத்தினராசா குறிப்பிட்டதாவது:-

1-ம் சந்தேகநபர் எனது மூத்தசகோதரியின் கணவர். இறந்தவர் எனக்கும் 1-ம் சந்தேகநபருக்கும் இனத்தவர்.

1-ம் சந்தேகநபரின் இரண்டாவது மகளான ரேணுகாதேவி தனது காணிக்குள்ளே வீடு கட்டிய காலத்தில் இறந்தவர் அந்த வீட்டில் கூலி வேலை செய்துவந்தார். அவர் எனது வீட்டிலும் கூலிவேலைசெய்வார்.

இறந்தவர் இறப்பதற்குச் சுமார் 5 கிழமைகளுக்கு முன் பொருநாள் ரேணுகாதேவி கல்லு அடுக்கிக்கொண்டிருக்கும்போது அங்கு போய் 'தனக்கு ஆசையாக இருப்பதாகத் தனக்கு பல ஆசை வார்த்தைகள் சொன்னதாக எனக்கு ரேணுகாதேவி முறையிட்டார்.

நான் இராஜகோபாலைச் சந்தித்தபோது ஒரு நாள் அவருக்குப் புத்திமதிகள் சொன்னேன். அதாவது குடிக்க வேண்டாமென்றும் குடிப்பதனால்தான் பல பிழைகள் நடப்பதாகவும் சொன்னேன்.

அப்போது இராஜகோபால் தான் இனிமேல் குடிப்பதில்லை என்று எனக்குக் கைபோட்டுச் சத்தியம் செய்துதந்தார். பின்னர் மே மாதம் 19-ம் திகதி காலை நான் இங்கு வந்தபோது இராஜகோபால் பாடசாலையில் தூங்கிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். உடனே அங்கு போய் பார்த்தேன். அவரது கழுத்திலே இலைக் கயிறு கட்டப்பட்டுத் தொங்கி இறந்த நிலையிலே அவர் காணப்பட்டார். அங்கு சனக் கூட்டமிருந்தது. சந்தேகநபர்களை அங்கு நான் காணவில்லை [அ[

## இவர்களுக்கு கூடுதல் பென்ஷன்

[கொழும்பு]

இரண்டு பிள்ளைகளுடன் குடும்பக்கட்டுப்பாடு செய்துகொள்ளும் அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் பென்ஷன் பெறும் காலத்தில் பென்ஷனில் பத்து சதவீதம் அதிகரிப்பு வழங்கப்படும்.

இந்தப் புதிய திட்டம் பற்றித் திட்ட அமுலாக்கல் அமைச்சு தற்போது ஆராய்ந்து வருகின்றது. விரைவில் ஓய்வூதியச்சட்டத்தில் இதற்கான திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது. (து)

## ஒருவர் கைது

[யாழ்ப்பாணம்]

கடந்த வியாழக்கிழமை இரவு யாழ். முனியப்பர் கோவிலடியில் இடம்பெற்ற ஒரு இளம் மனைவி மீதான பலாத்கார முயற்சி சம்பவம் தொடர்பாக நேற்று ஒருவர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

திருகோணமலையைச் சேர்ந்த இவர், வேலையில்லாதவர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.



தெல்லிப்பளை, பாவலர் துரையப்பாபிள்ளை வீதியில் அமைக்கப்பெற்ற 'கலைவாணி சன சமூக நிலையத்தை' சமாதான நீதிவான் திரு. க. கனகராசா திறந்துவைக்கிறார். அருகில் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த புலவர் சிவஞானம் காணப்படுகின்றார்.

## ஆசிரியர் வேலைநீக்கம்!

(உடுப்பிட்டி)

தொடர்ந்து பலநாட்களாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்காத ஆசிரியர் ஒருவர் கல்வித் திணைக்களத்தால் வேலைநீக்கம்செய்யப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் வடபகுதியில் நிகழ்ந்தது.

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் ஒருவரைப் பற்றி பொது மக்கள் செய்த புகாரின் எதிரொலியாக வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் பிரஸ்தாப பாடசாலைக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்டு ஆசிரியர் தினவரவு ஏட்டைப் பார்வையிட்டபோது குறித்த ஆசிரியர் சம்பளம் பெறும் தினங்களில் மட்டுமே பாடசாலைக்கு சமுகமளித்திருந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப ஆசிரியர் நிரந்தரமாக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளாரெனத் தெரிகிறது.

## சங்கக்கடைகளில் கொள்ளை:

# இருவருக்கு றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

இரவு வேளையில் நான்கு கூட்டுறவுச் சங்கக் கடைகளை உடைத்துக் கொள்ளையடித்ததாக குற்றம்சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட இரண்டு நபர்களை யாழ். நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர்செய்தபோது நீதிபதி திரு. சி. ஜோதிநாதன் இருவரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஆனைக்கோட்டை பொலிஸ் பகுதியிலுள்ள இரண்டு ப. நோ. கூ. சங்கக்கடைகளிலும்; கோப்பாய் பொலிஸ் பகுதியிலுள்ள இரண்டு ப. நோ. கூ. சங்கக்கடைகளிலும் நடைபெற்ற கொள்ளைகளை அடுத்து

(7-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பயங்கர வன்செயல்கள் போன்று இனியும் நடக்கக் கூடாது. அவற்றைத் தவிர்க்க வேண்டுமெனவும் சிங்கள மக்கள் விரும்புகிறார்கள்'' என்றார். [து[

# தமிழர் விடுதலை..

(3ம் பக்கத் தொடர்ச்சி)


எடுக்கப்படுமா? இல்லையா? என்பதை திட்டவட்டமாக கூறமுடியாத நிலை இருந்த போது அது விவாதத்துக்கு எடுக்கப்படும் என்று அமைச்சரவை பச்சைக்கொடி காட்டியிருப்பது மாத்திரமல்ல அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்களால் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்த அப்பிரேரணையின் முக்கியத்துவத்தையும் அது தெளிவாக்கியிருக்கிறது.


வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்யும் திரு அமிர்தலிங்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும் விவாதித்து தமிழர் விடுதலைக்கூட்டணி தொடர்பான அரசின் எதிர்கால கொள்கையை நிர்ணயிக்கும் மேடையாக ஜனாதிபதி இதனை குறிப்பிட்டிருக்கிறார்

அந்த கொள்கை என்னவாக இருக்கும்? என்பதே அரசியல் வட்டாரங்கள் எழுப்பும் கேள்வி. தமிழ் நாட்டில் திமுக வினரின் பிரிவினை கோரிக்கை பற்றியும் அதன் மீது நேருவின் நடவடிக்கையும் ஜனாதிபதி ஜயவர்த்தன தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் குறிப்பிட்டிருந்தார் இந்தும் அத்தகைய பிரிவினைத் தடைபற்றி அமைச்சர் திரு சிறில் மத்தியூ பத்திரிகை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். எனின் 'பிரிவினை தடை' தான் கேள்விக்குப்பதிலாகவிருக்குமா? என்ற கேள்வியும் இவ்வட்டாரங்களில் எழுப்புகின்றன.

இதேவேளை கொடுக்கப்பட்டுள்ள பிரேரணையுடன் சம்பந்தப்படாத விடயங்கள் விவாதத்தில் அனுமதிக்கப்படுமா? என்ற வினாவும் எழுகிறது. அத்தோடு அரசாங்கம் மீதான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப்பிரேரணை எப்போது எடுக்கப்படும் என்பதுபற்றி இன்னமும் தெரியவில்லை.


# ஜனம்ரீ-533 ட்ராக்டர்





விளைச்சலைப் பெருக்கும்! லாபத்தைக் கூட்டும்!

இதோ...செழிப்பான அதிக விளைச்சலை,நம்ப முடியாத அளவு சொற்ப செலவில் பெற உதவும் ஒரு சிக்கன ட்ராக்டர் - ஜனம்ரீ - 533 யுனிவர்சல் விவசாய ட்ராக்டர். இயக்குவது சுலபம். செலுத்துவதும் சுலபம். டீசல் செலவோ மிகச் சொற்பம்.

ஜனம்ரீ-533 ட்ராக்டரில் இழுக்கும் அல்லது இணைக்கும் துணைக்கருவிகள் எவற்றையும் பொருத்தலாம். வயலிலும் தோட்டத்திலும் அது வளம் பெருகச் செய்யும்.

இருப்பிலிருந்து கிடைக்கும் விலை ரூ. 78,950/-

தொடர்பு கொள்ளுங்கள்:
இலங்கை அரச வர்த்தக (ட்ராக்டர்) கூட்டுத்தாபனம்
244, ஆனல்ட் ரத்நாயக்க மாவத்தை
கொழும்பு 10.
தொலைபேசி: 96833/91712/91710

RJA 948

**வெலிங்டன்** (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
**ஆயிரம் ஜென்மங்கள்**

**லிடோ** யாழ். நகர்
10 30, 2-30, 6-00, 9-30
**அழியாத கோலங்கள்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**வின்ஸர்** இன்று மட்டும் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-00
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
**ரிஷி மூலம்**
From 01-07-1981 **Moving Violation** Color

6-வது ஜனத்திரள் வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
**தர்மராஜா** (கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
**சட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)

**மனோகரா** தினசரி 10-30, 2-30, 6-00, 9-30 (யாழ்ப்பாணம்)
நாகேஷ் - ஜெயந்தி - சௌகார் ஜானகி
**எதிர்நீச்சல்**

கடைசி வாரம்
**ராணி** தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
★ ரஜனிகாந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ கமல்
★ சௌகார் ஜானகி நடித்த
மகாராஜா சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
**ஜ**
3-ந் திகதி முதல் எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
**எங்கள் தங்கம்**

A long awaited film that has come to smash all the previous record collection.
**RAJAH** Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30
Within 2 Days 11 Housefull Shows and Twelve Thousand Patrons have Seen. Running with Packed Houses.



Bruce Lee Fighting his way to fame with his New Martial Arts

Golden Harvest's Presentation of the year

It tells the struggle of an overseas Chinese Leader

BRUCE LEE MARIAYI

Thailand's leading Actress MALARIN

**THE BIG BOSS**
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
Do not miss Bruce Lee Fighting skills with New Ideas


## சென். ஜோன்ஸ் வென்றது

[நிருபர்]

யாழ். இந்துக்கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கட் போட்டியில பரி. யோவான் கல்லூரி 62 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

யாழ். இந்துக் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். பரியோவான் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது, யாழ். இந்துக்கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றது.

0 0 0

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான 17வயதுக்குட்பட்ட கிரிக்கட்போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரி யாழ். மத்திய கல்லூரியை 88 ஓட்டங்களால் தோற்கடித்து வெற்றியீட்டியது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பரியோவான் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 5 விக்கட்டுகளை இழந்து 103 ஓட்டங்களைப்பெற்றது

யாழ். மத்திய கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் 18 ஓவர்களில் 2 விக்கட்டுகளை இழந்து 70 ஓட்டங்களைப்பெற்றது.

## சங்கக் ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த முத்தையா இரத்தினம், கோண்டாவிலைச் சேர்ந்த இராசையா நவரத்தினம் ஆகிய இரு நபர்களையும் ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லைந்துரை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கைதுசெய்தது.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்துகொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் சார்ஜன்ட் திரு தில்லைந்துரை இவர்கள் இருவரையும் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு ரி. ஜோகநாதன் இருவரையும் இன்று 30ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். இவர்களின் கைவிரல் அடையாளங்களையும் படம் எடுக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மற்றும் இருவரை பொலிசார் தேடிவருகின்றனர் இவர்கள் தலைமறைவாகிவிட்டதாக பொலிசார தெரிவித்தனர்.


**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-தேவிகா
**நீலவானம்**

**வெஸ்லி** (...)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராஜன் ...... புஷ்பலதா
**கற்பூரம்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
**தங்கை**


30,000 ரூபா திருட்டு!

# சந்தேகநபர் கைது

## பொருட்களும் மீட்பு

(புலோலி)

துன்னாலையில் தாலிக்கொடி, தங்கநகைகள், உடுப்புவகைகள் உட்பட சுமார் 30,000 ரூபா திருட்டுச்சம்பவம் தொடர்பான சந்தேகநபரைக் கைதுசெய்த பொலிசார் திருட்டு பொருட்களையும் மீட்டுள்ளனர்.

துன்னாலை வடக்கு வல்லிபுரம் குணரத்தினம் என்பவரது வீட்டில் வீட்டுக்காரர்கள் நித்திரையிலிருந்தபோது தாலிக்கொடி, சங்கிலி, பெண்டன் உடுபுடவைகள் உட்பட 30,000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போய் விட்டதாக பருத்தித்துறைப் பொலிசில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. திருச்சிற்றம்பலம், சார்ஜன்ட் ஜனுப் எம் ரி. எம். உலைவி ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி துன்னாலை வடக்கைச் சேர்ந்த சிவலிங்கம் (வயது 40) என்பவரைக் கைதுசெய்ததுடன் திருட்டுப் பொருட்களையும் மீட்டது.

சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதவான சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## இன்றைய பலன்

ஆனிமாதம் 14ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(30 - 6 - 81

மேடம்: அதிக இலாபம் கிடைப்பதற்கு இடமுண்டு விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும். மணவாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் உருவாகும். அமைதிதரும் தினம்.

இடபம்: அன்னியவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடுவார்கள் தனிவழிப்பயணம் ஆபத்தைத் தரக்கூடும் இன்று கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்த்துக்கொள்ளவும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு

மிதுனம்: வாகனச்சொந்தக்காரர்களுக்கு சிறப்பானதினம் வரவிலும் திருப்திகாணப்படுகின்றது. தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளுக்கு இடமேற்படும்.

கடகம்: குடும்பத்தில் சிறு பிணி தலைதூக்கும். இதன் மூலம் வைத்தியசெலவுகளுக்கும் இடம் ஏற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் இலக்காகுவீர்கள். கடமையில் கவனம் செலுத்தவும் இறைநம்பிக்கை நன்று

சிங்கம்: எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவிசெய்யப்போய் குறைகேட்க நேரிடலாம். உடல் நலத்தை தட்டேணவும்

கன்னி: சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள் காத்திருந்த கனிகளுக்கு களிப்பூட்டும். விருந்தொன்று கிடைக்கும் மகிழ்ச்சிகரமான தினம்.

துலாம்: கொடுத்தவாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள். மற்றவர்களின் ஏழனப்பார்வைக்கு இலக்காகலாம். பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

விருச்சிகம்: பொதுத்துறைகளில் உங்கள் செல்வாக்கு பிரகாசிக்கும். பொதுமக்களின் ஆதரவு வளர்வதற்கு இடமுண்டு. முன்னாள் ஆசிரியர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவார்கள்.

தனு: பொறியியலாளர்களுக்கு பொன்னான தினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு பொதுவாகத் தொழில்வெற்றி உண்டு.

மகரம்: உண்மை வழி நின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீது படியும் எதிர்பாராத அதிஸ்டலாபத்துக்கும் இடமுண்டு.

கும்பம்: உறவுமுறைநணரில் வெடிப்பு ஏற்படும் பகைவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம். தொழில் துறைகளில் அதிக கவனம் செலுத்தவும்.

மீனம்: வெளியிடத்துப்பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல் நலத்தைப்பேணவும். வாட்டிடும் பிணியும் தானே.

சோதிடகாலநிதி
திருமலை
க வேலுப்பிள்ளை

## மின் விநியோகம் கிடைக்கும்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை நிர்வாகஸ்தர் திரு. எஸ் அரசு புதிதாக மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் இம்மாத முடிவுக்குள் மின்சாரம் வழங்குமாறு பணித்துள்ளார்.

இதனால் பதினைந்துக்கும் மேற்பட்ட பாவனையாளர்கள் உடனடியாகப் பயன்பெறவுள்ளனர்.

## விறகு தட்டுப்பாடு

(புலோலி)

பருத்தித்துறைப்பகுதியில் விறகிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பருத்தித்துறைப்பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தைப் பணித்துள்ளார்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மரவிற்பனை நிலையத்தில் விறகுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், இப்பகுதிமக்கள் பெரிதும் கஷ்டம் அனுபவித்து வருவதாகவும், இப்பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மரவிற்பனை நிலையத்தில் பொதுமக்களுக்கு வேண்டிய விறகுகளை விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் பருத்தித்துறை பாவனையாளர் சங்க செயலாளர் திரு. சிவா கிருஸ்ணமூர்த்தி யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரைக் கோரியதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



'ஈழநாடு' ஸ்தாபகர்களில் முக்கியமானவரும், குழந்தைகளின் இரட்சகருமான அமரர் வைத்தியகலாநிதி க. சி. சண்முகரெத்தினம் அவர்களின் 15-வது நினைவு தினம் இன்றாகும்.

## தனியான . . .

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாதுகாப்பு சேவை 15 வருடமாக மலேசியாவில் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது.

உங்கள் நகரத்தைப் பாதுகாக்க இப்படியான ஒரு பாதுகாப்பு சேவை அவசியம். பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்க மாவட்டசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனக்கூட்டணியினர் தெரிவித்துள்ள 5 கோரிக்கைகளில் கூறியுள்ளனர். மலேசியாவில் வெற்றியளித்துள்ள பாதுகாப்பு சேவை இங்கு பயனளிக்கும் என நம்புகிறேன்''.

''எதிர்கட்சிதலைவர் திரு.அ. அமிர்தலிங்கம்மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை பற்றிஎன்ன கூறுகிறீர்கள்? என்று கேட்டபோது எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் இதுவரை இந்த மாதிரியான நிலை ஏற்பட்டதாகசொல்லமுடியாது என்றார்

திரு. அமிர்தலிங்கம் தவறு செய்திருந்தால், பாராளுமன்ற ஒழுங்குநடவடிக்கைக்குழு அது பற்றி விசாரணை செய்யலாமே ஒழிய, ஜனநாயகநாட்டில் எதிர்கட்சித்லைவர்மீது நம்பிக்யில்லா பிரேரணை கொண்டுவருவது நல்ல முடிவல்ல என்றும் திரு. பொன்னையா கூறினார்.

கடந்தகாலத்தில் மலேசியாவில் தமிழ்மொழியும் கலாசாரமும் வளர்ந்துவருதற்குக் காரணம் அங்குள்ள யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் என்றும்' தற்போது இந்திய தமிழர்களும் சேர்ந்து அவற்றை வளர்த்து வருவதாகவும் அவர் கூறினார்.

மலேசியாவில் கலவரங்கள் ஏற்பட்டிருக்கவில்லையா?என்று கேட்டபோது ஏன் இல்லை 65ம் ஆண்டில் ஒரு கலவரம் நடந்தது என்றார்.

பொதுத்தேர்தல் முடிந்தவுடன், சூட்டோடு சூடாக கலவரம் ஆரம்பித்து கடைகள், வீடுகள், கார்கள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், ஆனல், இங்கு நடந்ததுபோல் பொது நூலகமும், பத்திரிகை காரியாலயமும் தீயிடப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

அங்கு 24 மணிநேரத்திற்குள் பொலிசாராலும் இராணுவத்தினராலும் கலவரம் அடக்கப்பட்டதாகவும், பாதிப்படைந்தவர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கியதாகவும் கூறினார்.

''காலஞ்சென்ற தந்தை செல்வநாயகத்தைச் சந்திக்கும் வாய்ப்பு தமக்குக் கிடைக்கவில்லையென்றும், அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் பற்றி மலேசியாவில் அறிந்திருந்ததாகவும், யாழ்ப்பாணத்திற்கு வந்தது இதுவே முதல் தடவை என்றும் அவர் சொன்னார்.

[க]

## தேர்த்திருவிழா

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் கோவில் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

## ஈரானின் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி

தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா . . . பின்னணி?

அமெரிக்காவின் உதவியுடன் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானின் பிரதமர் ஜனுப் அலிரஜாய், பிரதம வழக்குத் தொடுநர் ஆகியோர் இக் குண்டுவெடிப்புச்சம்பவம்நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டனர்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பெருந்திரளான மக்கள் மத்திய தெஹ்ரான் வழியாக ஊர்வலவாகச் சென்றார்கள்.

## ஒரு வாரம் துக்கம்

ஈரானின் இஸ்லாமியக் குடியரசுக்கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இக் குண்டுவெடிப்புச சம்பவத்தில் 64 ஈரானிய அரசியல் தலைவர்கள் பலியானதற்கு அனுதாபம் தெரிவித்து ஒரு வார கால துக்கம் அனுஷ்டிக்குமாறு பிரதமர் அலிரஜாய் ஈரானிய மக்களை கேட்டுள்ளார்.

## மின்எறிஞ்சான் திருவிழா நாளை

[யாழ்ப்பாணம்[

வண்ணை ஸ்ரீவீரகாளி அம்பாள் ஆலய மின் எறிஞ்சான் திருவிழா நாளைபுதன்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

## 9 பொலிசார் . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இது குறித்து காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அதிபரிடம் நேரில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பொலிசார் யாழ். மாவட்டத்திலுள்ள வேறு பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டனர்.

திரு. பொன். சுகுணேந்திரன் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் கன்னுகம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. [மா]

## பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார்

[யாழ்ப்பாணம்]

மலேசியா எம். பி. திரு. ஏ. பொன்னையா நேற்று யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த பொது நூல் நிலையம், ''ஈழநாடு'' அலுவலகம், மற்றும் கட்டிடங்களை நேரில் பார்வையிட்டார்.

யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் இவரை அழைத்துச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களை காண்பித்தார்.

இவருடன் யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம், உறுப்பினர்கள் என். ரி. செல்லத்துரை, டேவிட், ஜனுப் எம். இமாம் ஆகியோரும் வந்திருந்தனர்.

நூல்நிலையப் பொறுப்பாளர் திருமதி நடராசா இரண்டாம் மாடிப்பகுதியில் நூல்கள் வைக்கப்பட்டிருந்த இடங்களைக் காட்டினார்.

95,000 நூல்கள் யாவும் முற்றாக எரிந்துவிட்டன என்றும் முதல்வர் அவரிடம் தெரிவித்தார். கட்டிடமும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

அதன்பின்னர் மூன்றும் மாடிக்குச் சென்று அங்கு அரைகுறையாக எரிந்திருந்த புத்தகங்களையும், பெரியார்கள், அறிஞர்களின் ஓவியங்களையும் பார்வையிட்டனர்.

திரு. பொன்னையா அதன்பின், ''ஈழநாடு'' காரியாலயத்தை பார்வையிட்டார். யாழ். எம்.பி.திரு. யோகேஸ்வரனின் இல்லம், கூட்டணிக் காரியாலயம், நவீனமார்க்கட்டில்எரிந்த பகுதிகள், பஸ்நிலையத்தில் எரிந்த கடைகளையும், அவ[ர்] பார்வையிட்டார். யாழ்நகரி[ல்] எரிக்கப்பட்ட கட்டடங்களி[ன்] புகைப்படங்களை முதல்வ[ர்] கொடுத்தபோது ஒவ்வொ[ரு] படமாக பார்த்து அவைப[ற்]றிய விளக்கத்தையும் [...] அறிந்துகொண்டார்.

நாச்சிமார் கோவிலடி து[ப்]பாக்கிச்சூட்டு சம்பவம் ப[ற்றி]யும் திரு. பொன்னையா மு[...] வரிடம் கேட்டறிந்துகொ[ண்]டார்.

## ஜூலை 18-ல் பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

எழுபத்தொன்பதாம் ஆண்டு எண்பத்தோராம் ஆண்டு சம்பவங்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கும் இச்சம்பவங்களில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோரியும் வேலையிழந்தவர்க்கு வேலை வழங்கக்கோரியும் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்ட மொன்றை நடாத்தவுள்ளது.

இக்கூட்டம் ஜூலை 18-ம் திகதி நடைபெறும்.


சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு

பெண்கள்

இன்று 30-06-81 நேர்முகப் பரீட்சை

தட்டெழுத்து தொழிற்சாலையில் வேலைபார்ப்பதற்கு பெண்கள் தேவை

வயது எல்லை 18—30

பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.

பாஸ்போட் இல்லாதவரும் வரவும்

விபரங்கட்கு :

சாகிப் ட்றேட் சென்டர்

[Sahib Trade Centre]

148, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

HAKEEM TRADES

63, Dam Street, Colombo--12

Tele. No. 34412

L/No. 363 [0167]



ஹோம் பினன்ஸ் லிமிட்.

★ SANDEN [JAPAN] சைக்கிள் டைனமோ கையிருப்பில் உண்டு.

கீழ்க்காணும் பொருட்களை மாதாமாதம் கட்டுப்பண முறையில் பெறலாம்.

★ உஷ்ணகாலத்திற்கு உகந்த முதல் தரமான USHA Ceiling Fan

★ மேசை மின் விசிறி 16''

★ PEDESTAL FAN

★ உயர் தரமான ''AIWA'' கசற் றேடியோ

★ சைக்கிள்கள்

விபரங்கட்கு:

ஹோம் பினன்ஸ் லிமிட்

82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 8310


## கல்வி


German Language புதிய வகுப்புகள் 4-7-81ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க. சபாநாயகம், ''நூடிகொட்''. 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[0168]


## மரண அறிவித்தல்

### திருமதி சிவானந்தசோதி பாலச்சந்திரன்

திருமதி சிவானந்தசோதி பாலச்சந்திரன் காலமானார். இவர் கல்யாணி சுந்தரலிங்கம் (ஆசிரியை கிறிஸ்தவக்கல்லூரி, கோப்பாய்) அர்களின் அன்புத் தாயாரும், இராசபூபதி அருணசலம், சிரோன்மணி நவரத்தினராசா, து. சடாச்சரன், து. பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சட்டத்தரணி மு. சுந்தரலிங்கத்தின் அன்பு மாமியாரும், குலோத்துங்கன், வரதுங்கன் ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரிகைக்காக 30-6-81 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு 40, முருகேசர் லேன், நல்லூர் இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

(0169)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 30ம் இலக்கத்திலுள்ள காரியாலய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office SrLanka Regd No. QB 100286/81 P. O. Box 49. Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707